TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081662

1. District : மாவட்டம் தஞ்சாவூர் PS: காவல்நிலையம் ஊ.த.கப்பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 06/22 Date: நாள் 27.07.22

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 120(B), 465, 468,
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 471, 477(A), 409
(iii) Act சட்டம்: இ.த.ச. Sections பிரிவுகள்: and 420 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1)(c) of PC Act 1988.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2015- Date to : நாள் வரை 2017
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.06.2019 Time : நேரம் —
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.07.2022 Time : நேரம் 12.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 15 கி.மீ. கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அ. வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி. பூண்டி.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பெ. சசிகலா (b) Father's/ Husband's Name : ~~தந்தை~~/ கணவர் பெயர் கி. ரவிச்சந்திரன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு. தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

முதற்கட்ட விசாரணைக்குப் பின் வழக்குப் பதிவு செய்யப்பட்டது

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி கடந்த 1956 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு தற்போதுவரை இயங்கி வரும் அரசு உதவிபெறும் கல்லூரியாகும். எதிரி-1 திரு. T.அறிவுடைநம்பி, த/பெ திருநாவுக்கரசு, என்பவர் தஞ்சாவூர் மாவட்ட கல்லூரி கல்வி மண்டல துணை இயக்குநராக 30.06.2018 முதல் 26.02.2020 வரை பணிபுரிந்துள்ளார். எதிரி-2 திரு.துரைராஜன் என்பவர் கண்காணிப்பாளராக, அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியில் 02.11.1992 முதல் தற்போதுவரை பணிபுரிந்து வருகிறார். எதிரி-3 முனைவர்.S.உதயகுமார் என்பவர் அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியில் முதல்வராக ஜுன் 2015 முதல் மே 2017 வரை பணிபுரிந்துள்ளார். எதிரி-4 திரு.S.K.தியாகராஜன் என்பவர் அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியில் வேதியியல் துறை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...... பதவி ...... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 27/7/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27.07.2022 – 14.00hrs.

Name: பெயர்
Rank: நிலை No. எண்

உதவி பேராசிரியராக 16.06.2017 முதல் தற்போது வரை பணிபுரிந்து வருகிறார். எதிரி-5 திருமதி.C. கற்பகசுந்தரி என்பவர் அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியில் தாவரவியல் துறையில் உதவி பேராசிரியராக16.06.2017 முதல் தற்போது வரை பணிபுரிந்து வருகிறார். எதிரி-6 திரு.K.துளசிய்யா வாண்டையார், என்பவர் அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியின் தாளாளர்/செயலாளராக இருந்து இறந்துவிட்டார் மற்றும் எதிரி-7 திரு.K.R.குமரேஷ், அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியில் கணக்காளராக (சுயநிதி பிரிவு)-ல் 2002ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறார். மேற்கண்ட எதிரிகள்-1 முதல் 5 வரையிலானவர்கள் Prevention of Corruption Act, 1988 பிரிவு 2 (c)-ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள். எதிரிகள்-6 மற்றும் 7 தனி நபர்களாவார்கள்.

<u>குற்றச்சாட்டு-1</u>

அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியில் கடந்த 2017ம் வருடம் நடைபெற்ற 19 உதவி பேராசிரியர்கள் பணி நியமனத்தின்போது இனசுழற்சி முறையை பின்பற்றாமல் சில உதவி பேராசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர், அதில் எதிரி-4 திரு.S.K.தியாகராஜன் வேதியியல் துறை உதவி பேராசிரியர் மற்றும் தாவரவியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வரும் எதிரி-5 திரு.சி.கற்பகசுந்தரி ஆகிய இருவரும் தாங்கள் அரசு பணியில் சேருவதற்காக தாங்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (Backward Class) என்பதை மறைத்து மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (Most Backward Class) என்பதற்கு இணையான சீர்மரபினர் (Denotified Community) என்ற போலியான ஜாதிச் சான்றிதழ்களை உருவாக்கி அதை உண்மை என்று சமர்ப்பித்து, அரசை ஏமாற்றி அவீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டியில் உதவி பேராசிரியர்களாகப் பணி நியமனம் பெற்று, கடந்த 16.06.2017 முதல் தற்போதுவரை உதவி பேராசிரியர்களாக பணிபுரிந்து அரசிடமிருந்து ஊதியம் பெற்று வருகிறார்கள். அதில் கடந்த 16.06.2017 முதல் 30.10.2020 வரை பெற்றுள்ள அரசு ஊதியம் தலா ரூ.27,49,644/- பெற்று, ஆக மொத்தம் ரூ.54,99,288/-ஐ ஊதியமாக பெற்று மேற்படி கல்லூரியில் உதவி பேராசிரியர்களாக பணிபுரிந்தும் தற்போதும் தொடர்ந்து உதவி பேராசிரியர்களாக பணிபுரிந்து அரசு ஊதியம் பெற்று வருகிறார்கள். எனவே, இன சுழற்சி முறையில் பணி நியமனத்திற்கு தேர்வானவர்களின் ஜாதிச் சான்றிதழ்களின் உண்மை தன்மையை பெறாமல்/சரிப்பார்க்காமல் உதவி போராசிரியர்களாக பணி நியமனத்திற்கு ஒப்புதல் செய்த எதிரி-1 திரு.டி.அறிவுடைநம்பி, போலி ஜாதி

சான்றிதழ்களை சமர்ப்பித்து பணி நியமனம் பெற்ற எதிரி-4 திரு.S.K.தியாகராஜன் மற்றும் எதிரி-5 திருமதி.சி.கற்பகசுந்தரி மற்றும் மேற்படி இருவரையும் பணி நியமனம் செய்த எதிரி-6 திரு.K.துளசிய்யா வாண்டையார், ஆகியோர்கள் குற்றமுறு சதி, ஏமாற்றும் நோக்கத்துடன் பொய்யாவணம் புனைதல், பொய்யாகப் புனையப்பட்ட ஆவணத்தை உண்மையானதென பயன்படுத்தியது, குற்றமுறு நம்பிக்கை மோசடி ஆகிய குற்றங்களை இ.த.ச பிரிவு 465, 120(B), 468, 471, 420, 409 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1)(c) of Prevention of Corruption Act 1988-ன் படி புரிந்துள்ளனர்.

குற்றச்சாட்டு-2

கடந்த நவம்பர் 2015 முதல் நவம்பர் 2017ம் ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டம், பூண்டியில் உள்ள அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியில் (தன்னாட்சி) Faculty Development Programme திட்டத்தில் 4 உதவி பேராசிரியர்கள் ஆராய்ச்சி படிப்பிற்காக சென்றபோது, அவர்களுக்கு பதிலாக Faculty Improvement Programme திட்டத்தின் கீழ் 4 உதவி பேராசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு கடந்த 03.11.2015ம் தேதி முதல் 02.11.2017 வரை 24 மாதங்கள் பணிபுரிய நியமிக்கப்பட்டனர். அதில் இயற்பியல் துறைக்காக நியமிக்கப்பட்ட உதவி பேராசிரியர் திரு.L.ஸ்ரீராம் என்பவர் கடந்த 03.11.2015ம் தேதி முதல் 13.01.2016ம் தேதி வரை மேற்படி கல்லூரியில் பணிபுரிந்தவர், 14.01.2016ம் தேதிக்கு பிறகு கல்லூரிக்கு பணிக்கு வரவில்லை. மேற்படி L.ஸ்ரீராம் கல்லூரிக்கு பணிபுரிய வராத நாட்களில், கல்லூரிக்கு வந்து பணிபுரிந்தது போன்று இயற்பியல் துறை வருகைப்பதிவேட்டில் கடந்த 18.01.2016ம் தேதிக்கு பிறகு உள்ள வேலை நாட்களில் அவரது பெயருக்கு நேராக அவரது சுருக்கொப்பத்தை வேறு நபர் மூலம் செய்தும், மேற்படி உதவி பேராசிரியர் ஸ்ரீராம் பணிக்கு வராததை, எதிரி-2 திரு.துரைராஜன் (கல்லூரி கண்காணிப்பாளர்) மற்றும் எதிரி-3 திரு.உதயகுமார் (முன்னாள் கல்லூரி முதல்வர் ஓய்வு) ஆகியோர் மறைத்து, அவர் கல்லூரியில் பணிபுரிந்து வந்ததுபோல் பொய் அறிக்கையை University Grants Commission-க்கு சமர்ப்பித்து, அதன் பிரகாரம் University Grants Commission-னிடமிருந்து உதவி பேராசிரியர் L.ஸ்ரீராம் என்பவருக்கு 24 மாதங்களுக்குரிய சம்பளமாக வழங்கப்பட்ட தொகை ரூ.11,68,896/-ஐ நேர்மையற்ற முறையில் பெற்று திரு.கி.துளசிய்யா வாண்டையார் (கல்லூரி செயலாளர்/தாளாளர்) என்பவரின் ஒப்புதலுடன் கையாடல் செய்தும், மேற்படி L.ஸ்ரீராம் நவம்பர் 2015 முதல் நவம்பர் 2017 மாதங்களுக்குரிய சம்பளம் பெற்றுக்கொண்டது போல் எதிரி-2, எதிரி-3 மற்றும் எதிரி-7 திரு.குமரேஷ் (கல்லூரி சுயநிதி பிரிவு கணக்காளர்) ஆகியோர் ஒன்றிணைந்து போலி ஆவணங்களை உருவாக்கி, அதை உண்மை போன்று

காண்பித்து Utilization Certificate-ஐ பெற்று University Grants Commission-க்கு அனுப்பி வைத்து அரசை ஏமாற்றி, அதன்மூலம் அரசுக்கு ரூ.11,68,896/- நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். எனவே மேற்படி பல்கலைக் கழக மானியக்குழுவினரால் வழங்கப்பட்ட ரூ,11,68,896/- தொகையை தவறாக பயன்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கிய எதிரி-6 திரு.துளசிய்யா மற்றும் எதிரி-2 திரு.துரைராஜன், எதிரி-3 திரு.உதயகுமார் மற்றும் எதிரி-7 திரு.குமரேஷ் ஆகியோர் ஒன்றிணைந்து தற்காலிக உதவி பேராசிரியராக பணிபுரியாத ஒருவர் மேற்படி கல்லூரியில் பணிபுரிந்ததாக போலி ஆவணங்கள் தயார் செய்து, அதனை உண்மையென்று பயன்படுத்தி University Grants Commission-லிருந்து வழங்கப்பட்ட அரசு ஊதியம் ரூ.11,68,896/- ஐ நேர்மையற்ற முறையில் கையாடல் செய்து அரசு பணியாளராக இருந்து குற்றமுறு கெட்ட நடத்தையுடன் செயல்பட்டு எதிரிகள் 2,3,6 மற்றும் 7 இ.த.ச பிரிவு 120(B), 465, 468, 471, 477(A), 409, 420 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1)(c) of Prevention of Corruption Act 1988-ன் படி குற்றம் புரிந்துள்ளனர்.

எனவே ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக முதற்கட்ட விசாரணை அறிக்கை PE 35/2019/EDN/TH - நாள் 08.02.2021-ன் படியும் மற்றும் Higher Education (F1) Department, Secretariat, Chennai-9 Letter No.7253/F1/2021-3 dt:19.04.2022-ன் படியும் எதிரிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே நான் இன்று 27.07.2022 ஆம் தேதி காலை 12.00 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2022 u/s 120(B), 465, 468, 471, 477(A) 409, and 420 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1) (c) of Prevention of Corruption Act, 1988-ன் படி வழக்கு பதிவு செய்தேன்.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் எதிரிகள்-1 முதல் 5 வரையிலானவர்களின் பெயரில் வழக்கு பதிவு செய்ய சம்மந்தப்பட்ட துறையின் முன் அனுமதி நகல், ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி, தஞ்சாவூர் இருப்பு கும்பகோணம் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் வழக்கு புலன் விசாரணைக்கு கோப்பில் வைக்கப்பட்டது.

27/7/22

(V.சசிகலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
தஞ்சாவூர்.

**தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2022 u/s 120(B), 465, 468, 471, 477(A) 409, and 420 IPC r/w 109 IPC & 13(2) r/w 13(1) (c) of Prevention of Corruption Act, 1988.**

எதிரிகளின் பெயர்

1) முனைவர். T.அறிவுடைநம்பி, த/பெ திருநாவுக்கரசு, மண்டல துணை இயக்குநர், கல்லூரி கல்வி, தஞ்சாவூர் மாவட்டம்.

2) திரு.துரைராஜன், கண்காணிப்பாளர், அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.

3) முனைவர்.S.உதயகுமார், முதல்வர், அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி (ஓய்வு).

4) திரு.S.K.தியாகராஜன், உதவி பேராசிரியர் (வேதியியல் துறை), அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.

5) திருமதி.C. கற்பகசுந்தரி, உதவி பேராசிரியர் (தாவரவியல் துறை), அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.

6) திரு.K.துளசிய்யா வாண்டையார், கல்லூரி தாளாளர்/செயலாளர், அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.

7) திரு.K.R.குமரேஷ், கணக்காளர் (சுயநிதி பிரிவு), அ வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.

27/7/2022

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION
THANJAVUR